# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 17.11.2007 –ம் தேதி சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்றது.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

**பொருள் எண். 1**

செயற்பொறியாளர், கிராம குடிநீர் திட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அவர்களின் (ந.க.எண்.JDO2(S)/F சுனாமி/2007/07.11.2007) கடிதத்தில் உலக வங்கி நிதியுதவியுடன் சுனாமி (ETRP) திட்டத்தின்கீழ் குளச்சல் நகராட்சிக்குட்பட்ட ஆசாத் நகர், இந்திரா காலனி, பண்டகசாலைபுரம், சிங்காரவேலன் காலனி மற்றும் பெரியநாயகி காலனி ஆகிய சுனாமி குடியிருப்பு பகுதிகளில் கழிவுநீர் புதை வடிகால் திட்டம் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயல்படுத்தவுள்ளதால் அதுவரை சாலைப்பணிகள் செய்யக் கூடாது எனவும், சாலைப் பணிகள் மேற்கொள்வதற்கு முன் புதை வடிகால் கழிவுநீர் திட்ட பணிக்கான குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ள உரிய தீர்மானத்தினை இயற்றி அனுப்புமாறு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் கோரப்பட்டுள்ளது. விபரம் மன்றத்தின் பார்வைக்கு.
**அ.குறிப்பு :** மன்றம் முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.381.** பொருளில் கொடுக்கப்பட்டுள்ள சுனாமி மறுகுடியிருப்பு பகுதிகளைத் தொடர்ந்து உருவாக்கப்பட்டுள்ள K.S.S.Sகாலணி மற்றும் காளிதாஸ் காலணி பகுதிகளில் கட்டப்பட்டுள்ள சுமார் 250 சுனாமி மறுகுடியிருப்பு வீடுகளுக்கு இத்திட்டம் ஏற்கனவே அமுல் படுத்தப்பட்டுள்ளது. இப்பகுதிகள் நீரூற்றுப் பகுதிகளாக உள்ளதால் வெளியேற்றுப்பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள oxidation pond-லிருந்துவெளியேற்றுக்குழாய் வழியாக நீர் பின்னோக்கிச் செல்வதால் வீடுகளில் உள்ள கழிவறைகளிலிருந்து துர்நாற்றத்துடன் கூடிய அசுத்த நீர் வெளியேறுகிறது. இது சம்மந்தமாக, மேற்படி sewerage திட்டத்தினை வடிவமைத்த சம்மந்தப்பட்ட பொறியாளர்கள் பார்வையிட்டனர். அவ்வப்போது உறிஞ்சி லாறிகள் மூலமாக, Disposal Area-வில் கழிவு நீரை வெளியேற்றுவதைத் தவிர வேறு வழியில்லை என்று கூறிவிட்டனர். பொருளில் குறிப்பிட்டுள்ள பகுதிகளிலும் இதேபோன்று நீரூற்றுப்பகுதிகளாக உள்ளதால், இப்பகுதிகளில் இத்திட்டம் அமுல்படுத்தப்பட்டால், இதே நிலைதான் நேரிடும் என்பதாலும், இப்பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் ஏற்கனவே Septic Tank தனித்தனியாக உள்ளதாலும், மேற்படி பகுதிகளில் ETRP பணிகள் உடனடியாக துவக்கப்பட உள்ளதாலும், இப்பகுதியில் இத்திட்டத்தினை அமுல்படுத்துவது என்பது எவ்வகையிலும் சரியாக இராது என்று இம்மன்றம் தனது ஏகமனதான கருத்தினை தெரிவிக்கிறது.

**பொருள் எண். 2**

குளச்சல் நகர்மன்ற தீர்மானம் எண். 185 நாள் 20.04.2007–ல் குடிநீர் கட்டண வசூலினை முறைபடுத்தும் விதமாக மூன்று மாதங்களுக்கு ஒரு முறை செலுத்தப்பட வேண்டிய குடிநீர் கட்டணம் அதற்கு அடுத்த மாதத்திய 15 நாட்களுக்குள்ளாக செலுத்த தவறும் பட்சத்தில் மாதம் ஒன்றிற்கு ரூ. 10/– வீதம் மூன்று மாதங்களுக்கு ரூ. 30/– அபராத கட்டணம் சேர்த்து வசூலிக்கப்படும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக 30.05.2007–ம் தேதிய தினத்தந்தி செய்தித்தாளில் விளம்பரம் வெளியிடப்பட்டு ஆட்சேபனைக் கடிதம் ஒன்று மட்டும் பெறப்பட்டுள்ளது. அன்னார் அவரது ஆட்சேபனையில் போதிய அறிவிப்பிற்கு பிறகும் குடிநீர் கட்டணம் செலுத்தாவிடில் அபராதம் விதிப்பதில் தடையில்லையென மனுதாரரே தெரிவித்துள்ளார். விபரம் மன்றத்தின் பார்வைக்கு.
**அ.குறிப்பு :** நகராட்சியின் நிதி நிலையை கருத்தில் கொண்டும், அத்தியாவசிய தேவையினை கருத்தில் கொண்டும் ஆட்சேபனையினை நிராகரிக்கலாம்.
**தீர்மானம் எண்.382.** அலுவலகக்குறிப்பு ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண். 3**

குளச்சல் நகராட்சி மினி லாறி TN.74 Z- 8931—க்கு தகுதி சான்று பெறவும், பழுதுகள் நீக்கம் செய்யவும், உத்தேச செலவு ரூ. 18,000/—க்கு நகர்மன்றத் தீர்மானம் எண்.353 நாள் 29.10.2007—ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்பேரில் 12..11.2007—ல் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

| | | Spare Parts | Labour | Total |
|---|---|---|---|---|
| 1 | மணி மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் | :ரு.11,880 | ரூ. 6,100 | ரூ. 17,980 |
| 2 | கே.எஸ்.எஸ்.எஸ்.ஆட்டோ மொபைல்ஸ், நாகர்கோவில் | ரூ.12,820 | ரூ. 7,075 | ரூ. 19,895 |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மணி மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி குறைவானதை எற்கவும், பொது நிதியிலிருந்து செலவு செய்திடவும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மணி மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணிகளை மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண்.383**. அலுவலகக்குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாக த் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண். 4**

இந்நகராட்சியில் உள்ள பிறப்பு இறப்பு படிவங்களை பைண்டிங் செய்வதற்கு உத்தேச செலவு ரூ. 1700/—க்கும், அதற்குரிய விலைப்புள்ளிகள் பெறுவதற்கும் நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.384**. அலுவலகக்குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாக த் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண். 5**

குளச்சல் நகராட்சி ஈ—டெண்டர் தொடர்பான டிஜிட்டல் சிக்னேட்சர் கார்டு பெறுவதற்கு Account Officer, National Information Centre, New Delhi என்ற முகவரிக்கு ரூ. 1090/— அனுப்ப நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் எண். 5982/2007/சி2 நாள் 11.10.2007—ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகைக்கான காசோலை சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண்.385**. அலுவலகக்குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாக த் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண். 6**

குளச்சல் நகராட்சிக்கு தெருவிளக்கு மின்சார பொருட்கள் விநியோகம் செய்திட M/s. இந்தியன் ஏஜென்சி, நாகர்கோவில் என்ற நிறுவனத்திற்கு 28.09.2007—ல் விநியோக உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி நிறுவனம் சம்மந்தப்பட்ட பொருட்களை சப்ளை செய்யாததால் மீண்டும் 09.10.2007 அன்று மீண்டும் விநியோக உத்தரவு வழங்கப்பட்டது. ஆனால் மேற்படி நிறுவனம் சப்ளை செய்யப்படும் பொருட்களை தரச் சான்றிதழ் பெற்று தர இயலாது எனவும் ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் குறிப்பிட்ட எந்த நிபந்தனையையும் ஏற்றுக் கொள்ள இயலாது எனவும், தனது 14.11.2007—ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளது. ஒப்பந்தக்காரர் இதுவரை எந்த ஒப்பந்தத்திலும் கையெ.ழுத்தும் இடவில்லை. எனவே பொது நலன் கருதியும், மேற்படி பொருட்கள் தெருவிளக்கு பிரிவிற்கு உடனடியாக தேவைப்படுவதாலும் இந்தியன் ஏஜென்சியின் 14.10.2007—ம் தேதிய கடிதத்தை அடிப்படையாகக் கொண்டும் சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட விநியோக உத்தரவினை ரத்து செய்திடவும், தெருவிளக்குப் பணிக்கு உடனடியாக பொருட்கள் தேவைப்படுவதால் இரண்டாவது குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனமாகிய கங்கா எலக்ட்ரிக்கல், திருநெல்வேலி அவர்களுக்கு இந்தியன் ஏஜென்சி நிறுவனம் அளித்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் சப்ளை செய்ய ஒத்துக் கொள்ளும் பட்சத்தில் வினியோக உத்தரவு வழங்குவதற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : சப்ளை செய்யப்படும் பொருட்களின் தரத்தினை 3% முதல் 5% வரை சோதனை செய்து தரச் சான்றிதழ் பெற வேண்டும் என்ற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண். 72345/99/இ1 நாள் 19.08.2002—ல் தெரிவிக்கப்பட்டுள்ளதின் அடிப்படையிலும்

ஒப்பந்தப்புள்ளி நமுனாவில் குறிப்பிட்டுள்ள விதிமுறைகளை மீறி காலம் தாழ்த்தி மேலும் புதிய நிபந்தனைகளை விதிப்பதால் நிர்வாக நலன் கருதியும், இந்தியன் ஏஜென்சியின் விநியோக உத்தரவினை ரத்து செய்து இந்தியன் ஏஜென்சி நிறுவனம் அளித்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் சப்ளை செய்ய கங்கா எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனம், திருநெல்வேலி ஒத்துக் கொள்ளும் பட்சத்தில் வினியோக உத்தரவு வழங்குவதற்கும் அனுமதிக்கலாம்.
**தீர்மானம் எண்.386.** அலுவலகக்குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாக த் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண். 7**

UIDSSMT திட்டம் தொடர்பான திட்டப் பிரேரணை தயார் செய்வதற்கு Consultant நியமனம் செய்து கொள்ளலாம் என நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித எண். 74786/2006/பி3 நாள் 04.09.2006–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ந.க .எண்.434/2007/அ2–ல் Consultant பட்டியலினையும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் எண். 69595/2002/பி3 நாள் 30.11.2006 மூலம் அனுப்பியுள்ளனர். இதில் சாலை மற்றும் பாலம் கட்டுவதற்கு M/s. Wilbor Smith Associate மற்றும் M/s. M.D.P. Consultant ஆகிய நிறுவனங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஆகவே குளச்சல் நகராட்சியில் UIDSSMT திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு மேற்கண்ட Consultancy மூலம் திட்டப் பிரேரணை தயார் செய்யவும் D.P.R. தயார் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு :** அனுமதிக்கலாம்.
**தீர்மானம் எண்.387.** அலுவலகக்குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாக த் தீர்மானிக்கப்பட்டது.

நகராட்சி மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் நவம்பர் திங்கள் 28–ம் நாள் புதன்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்றது.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

**பொருள் எண் :1**

இந்நகராட்சியில் பணிபுரியும் கீழ்கண்ட பணியாளர்கள் அலுவலக விசயமாக பயணம் மேற்கொண்ட வகையில் தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியாளர் பெயர் | பதவி | மாதம் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | திரு.ஜெகன்னாதன் | மேலாளர் | 9/2007 | 370 |
| 2 | திருமதி.சுதா | நகரமைப்பு ஆய்வாளர் | 9/2007 | 773 |
| 3. | திரு.ஆரியங்காவு | துப்புரவு ஆய்வாளர் | 6/2007<br>7/2007 | 205<br>480 |
| 4. | திருமதி.நூர்ஜகான் | இ.உ | 9/2007 | 1196 |
| 5. | திரு.நடராஜா | அ.உ | 8/2007<br>9/2007 | 98<br>202 |
| 6. | திருமதி.நிர்மலாஜாய் | இ.உ | 9/2007 | 140 |

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்
**தீர்மானம் எண்.388.** அலுவலக குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண் : 2**

குளச்சல் நகராட்சி டாக்டர்.அம்பேத்கார் தினசரி சந்தை வளாகத்தினுள் புதிதாக கட்டப்பட்ட வணிக வளாக கட்டிடங்களில் (கலைஞர் கருணாநிதி வணிக வளாகம் மற்றும் கவியரசு கண்ணதாசன் வணிக வளாகம்) அமைந்துள்ள கடைகளை 17.09.2007 அன்று ஏலம் விடப்பட்டது தொடர்பான விளம்பரத்தினை தினசரி பத்திரிகைகளில் விளம்பரம் செய்த வகையில் Imageads, Chennaiஎன்ற நிறுவனத்திற்கு ரூ.35893/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு :** அனுமதிக்கலாம்.
**தீர்மானம் எண்.389.** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண் : 3**

நகர்ப்புற கூலி வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் உய்யாண்டிவிளையில் மழைநீர் வடிகால் ஓடை கட்டுவதற்கு ரூ.125000/–க்கு நகர்மன்ற தீர்மானம் எண்.315 நாள்.20.9.2007ல் ஒப்புதல் அளிக்கப்பட்டதின் பேரில் கட்டுமான பொருட்கள் விநியோகம் செய்யும் பணிக்கு 6.11.2007ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1. | திரு.டேவிட்ராஜ் | 0.07% மதிப்பீட்டை விட குறைவு (ரூ.42339/–) |
| 2. | திரு.P.தங்கமணி | 2.57% மதிப்பீட்டை விட அதிகம் (ரூ.43460/–) |

இதில் திரு.டேவிட்ராஜ் என்பவர் 0.07% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
**அ.குறிப்பு :** குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.டேவிட்ராஜ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.
**தீர்மானம் எண்.390.** அலுவலகக் குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**<u>பொருள் எண் : 4</u>**

நகர்மன்றத் தீர்மான எண்.298 நாள்.16.8.2007ல் மரமடி பகுதியில் குடிநீர் குழாயில் ஏற்பட்ட பழுதினை சரிசெய்வதற்கு ரூ.22000/–க்கான மதிப்பீட்டிற்கு மன்றம் ஒப்புதல் அளித்ததின் பேரில் 6.11.07 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.சந்திரசேகர் | 0.12% மதிப்பீட்டை விட குறைவு (ரூ.19806.96/–) |
| 2. | திரு.P.தங்கமணி | 4.78% மதிப்பீட்டை விட அதிகம் (ரூ.20781/–) |

இதில் திரு.C.சந்திரசேகர் என்பவர் 0.12% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u> :** குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.C.சந்திரசேகர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.391**. அலுவலகக் குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**<u>பொருள் எண் : 5</u>**

இந்நகராட்சி ஒப்பந்தத்தாரர் திரு.லாரன்ஸ் என்பவர் பணிகள் செய்ததில் வைப்புத் தொகை ரூ.3030/– பிடித்தம் செய்யப்பட்டு காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பில் உள்ளது. இப்பணி தொடர்பாக தணிக்கை தடை ஏதும் இல்லை எனவே இத்தொகையில் ரூ.1635/– தொழில் வரி பிடித்தம் செய்துவிட்டு மீதமுள்ள தொகை ரூ.1395/–ஐ வழங்கவும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u> :** காலம் கடந்த வைப்புத்தொகையிலிருந்து ரூ.3030/–ஐ திரும்ப வழங்கவும் தொழில் வரி ரூ.1635/–ஐ பிடித்தம் செய்து மீத தொகை ரூ.1395/–ஐ ஒப்பந்தத்தாரருக்கு வழங்கவும் மன்றம் ஒப்புதல் செய்யலாம்.

**தீர்மானம் எண்.392**. அலுவலகக் குறிப்பினை ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**<u>பொருள் எண் : 6</u>**

நகர்மன்ற தீர்மானம் எண்.338 நாள்.28.9.2007ல் பழுதடைந்துள்ள மோட்டார்களை சரி செய்ய ரூ.69000/– மதிப்பீட்டிற்கு அனுமதியளிக்கப்பட்டதின் பேரில் 6.11.2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. அதன்பேரில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின் வருமாறு

| | | |
|---|---|---|
| 1. | திரு.P.தங்கமணி | 4.32% மதிப்பீட்டை விட அதிகம் (ரூ.71880/–) |
| 2. | திரு.C.சந்திரசேகர் | 0.01% மதிப்பீட்டை விட குறைவு (ரூ.68894/–) |

இதில் திரு.C.சந்திரசேகர் என்பவர் 0.01% மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u> :** குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.C.சந்திரசேகர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.393**. அலுவலகக் குறிப்பினை ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

தலைவர்,
குளச்சல் நகராட்சி மன்றம்.

<u>குளச்சல் நகராட்சி</u>

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் நவம்பர் திங்கள் 28–ம் நாள் புதன்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்றது

தலைவர்
குளச்சல் நகராட்சி

மன்றம்

**<u>பொருள் எண் :1</u>**

இந்நகராட்சியில் பணிபுரியும் கீழ்கண்ட பணியாளர்கள் அலுவலக விசயமாக பயணம் மேற்கொண்ட வகையில் தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியாளர் பெயர் | பதவி | மாதம் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | திரு. B.K. ரமேஷ் | நகராட்சி பொறியாளர் | 7/2007<br>8/2007 | 615/–<br>300/– |
| 2 | திரு. செல்வன் ஜார்ஜ் | பொது.ப்பணி மேற்பார்வையாளர் | 9/2007 | 1005/– |
| 3 | திருமதி.சுதா | நகரமைப்பு ஆய்வாளர் | 10/2007 | 340/– |
| 4. | திரு.எஸ்.ஜே. இராஜகுமார் | இளநிலை உதவியாளர் | 10/2007 | 204/– |
| 5 | திருமதி.நூர்ஜகான் | இளநிலை உதவியாளர் | 10/2007 | 131/– |
| 6 | செல்வி.க. சாந்தி | வருவாய் உதவியாளர் | 9/2007 | 131/– |
| 7 | திரு.நடராஜா | அலுவலக உதவியாளர் | 10/2007 | 371/– |

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மானம்எண்.394**. அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

**<u>பொருள் எண் : 2</u>**

இந்நகராட்சியில் கணனி விவர தொகுப்பாளராக பணிபுரியும் திரு.ராபின் சுந்தர் சிங் அவர்கள் இராஜபாளையம் நகராட்சியிலிருந்து மாறுதலாகி வந்த வகையில் மாறுதல் பயணப்படி ரூ.2066/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மானம்எண்.395**. அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

**<u>பொருள் எண் : 3</u>**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு பகுதியில் இரண்டு எரிவாயு கலன்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி எரிவாயு கலன்களை குளச்சல் நகராட்சியின் சொத்தாக ஏற்றெடுப்பது தொடர்பாக ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், குருந்தன்கோடு அவர்களிடமிருந்து கடிதம் (எண்.அ3/2073/06 நாள்.2.11.2007) வரப்பெற்றுள்ளது. மேற்காண் எரிவாயு கலன்களை நகராட்சியின் சொத்தாக எடுத்து கொள்வது தொடர்பாக மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் முடிவு செய்யலாம்.

**தீர்மானம்எண்.396**. அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

**<u>பொருள் எண் : 4</u>**

இந்நகராட்சியின் கணனிப் பிரிவில் U.P.S.-க்கு தனியாக (Earth line) எர்த் லைன் அமைப்பதற்கும், ஆணையர் மற்றும் பொறியாளர் அறைகளுக்கு கணனி வைப்பதற்கும் U.P.S.–லிருந்து இணைப்பு கொடுப்பதற்கும்., இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 3,000/–க்கும், மேற்படி பணியினை பொதுநிதியில் மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u> :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம்எண்.397.** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

**<u>பொருள் எண் : 5</u>**

நகர்மன்றத் தீர்மானம் எண். 224 நாள் 21.09.2007–ன்படி மழைநீர் கட்டமைப்பு (Rain Water Harvesting) திட்டத்தின்கீழ் ரூ.1.00 லட்சம் மதிப்பீட்டில் வெள்ளிப்பிள்ளையார் கோவில் முதல் பாலத்தன்கரை வரை செல்லும் பாதையில் மழைநீர் கட்டமைப்புப் பணி மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டதின் பேரில் 31.10.2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு. அம்புறோஸ் | 4.51% மதிப்பீட்டை விட அதிகம் (ரூ.1,91,663.00) |
| 2. | திரு.முகம்மது அப்துல்காதர் | 0.001% மதிப்பீட்டை விட குறைவு (ரூ. 97,279.96/–) |

இதில் திரு.முகம்மது அப்துல் காதர் என்பவர் 0.001 % மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப் புள்ளி அளித்துள்ளார். இது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u> :** குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.முகம்மது அப்துல்காதர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம்எண்.398.** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

**<u>பொருள் எண் : 6</u>**

குளச்சல் நகராட்சி எல்கைக்குட்பட்ட பண்டகசாலைபுரத்திலுள்ள வைத்தியர்விளாகம் இக்பால் குறுக்குத்தெரு மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக கட்டப்பட்ட ULCகாலனி ஆகிய பகுதிகளில் குடிநீர் பகிர்மான குழாய்கள் இல்லை. அங்கு மக்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்குவதற்கு குடிநீர் பகிர்மான குழாய் பதிப்பதற்கும் துறைமுகத்தெரு 1 நம்பர் பகுதி மற்றும் காரிதாஸ் காலனி பகுதிகளில் குடிநீர் விநியோகம் சீராக வழங்குவதற்கு வால்வுகள் அமைப்பதற்கும் இதற்கான மதிப்பீட்டுத்தொகை ரூ.95000/–க்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u> :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம்எண்.399.** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

**<u>பொருள் எண் : 7</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் தினசரிச் சந்தையில் IDSMT திட்டத்தின்கீழ் புதிதாக கட்டப்பட்டுள்ள வணிக வளாக கட்டிடங்களின் கடைகள் நான்கு முறை ஏலம் விட்டது போக, ஏனைய கடைகள் 5–வது முறையாக 23.11.2007 அன்று மறுஏலம் விடப்பட்டதில் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி விபரம் மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

| கடை எண் | உச்ச ஏலக்கேள்வி கேட்டவர் பெயர் | உச்ச ஏலக்கேள்வி விபரம் |
|---|---|---|
| 16 | திருமதி. சகாய ராணி | ரூ. 1520/– |
| 31 | திரு. ஐசக் | ரூ. 1510/– |

**அ.குறிப்பு :** மேற்கண்ட மறு ஏலம் ஐந்தாவது முறையாக கேட்கப்பட்டதாலும் மண்டல செயற்பொறியாளர், திருநெல்வேலி அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பொதுப்பணித் துறை விலை விகிதப்படியான தொகையைவிட கூடுதலாக இருப்பதாலும் கடைகள் ஏலம் எடுக்காமல் காலியாக இருந்து நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படாமல் இருந்திடவும் பொதுப்பணித்துறையால் நிர்ணயிக்கப்பட்ட ஏலத்தொகைக்கும் கூடுதலாக இருப்பதாலும் மேற்கண்ட ஏலத்தை ஏற்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம்எண்.400.** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

**பொருள் எண் : 8**

குளச்சல் நகராட்சியில் 23–வது வார்டிலுள்ள கதவு எண். 29/52A. எண் கட்டிடத்தில் வழங்கப்பட்ட குடிநீர் இணைப்பை (குடிநீர் இணைப்பு எண்.3646) மனுதாரர் நிரந்தரமாக துண்டிப்பு செய்ய கோரியுள்ளார். எனவே மனுதாரரின் வேண்டுகோளை ஏற்று கதவு எண்.29/52.A. யிலுள்ள குடிநீர் இணைப்பை துண்டிக்க மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம்எண்.401.** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

**பொருள் எண் : 9**

குளச்சல் நகராட்சியில் 12–வது நிதிக்குழு 2006–2007 திட்டத்தின்கீழ் இந்திரா காலனியில் மண்புழு உரம் தயாரிக்கும் கட்டமைப்பு ஏற்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. அதில் மண் தோண்டும் போது கிடைக்கப்பெற்ற சுமார் 15.66 M3 அளவுடைய கருங்கற்கள் மேற்படி பணி செய்ய இடையூறாக இருந்ததால் நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று 06.11.2007 அன்று ஏலம் விடப்பட்டதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் 06.11.2007 அன்று நடைபெற்ற ஏலத்தில் உச்ச ஏலக்கேள்வி ரூ.4,000/–க்கு கேட்ட திரு. சுமன் என்பவரின் ஏலக்கேள்வியினை ஏற்றுக் கொள்வது தொடர்பாகவும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

**தீர்மானம்எண்.402.** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

**பொருள் எண் : 10**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட உய்யாண்டிவிளை, கல்லத்திவிளை, கே.கே.எஸ்.எஸ்.எஸ். காலனி ஆகிய பகுதிகளில் கட்டுமானப் பணி தொடர்பாக சாலையில் இடையூறாக நிற்கும் மின்கம்பங்களை மாற்றுவதற்கு பதிவுக் கட்டணமாக ரூ. 150/– செலுத்த கேட்டு மின்வாரிய அலுவலகத்திலிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகை செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** அனுமதிக்கலாம்.

**தீர்மானம்எண்.403.** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

**பொருள் எண் : 11**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் உள்ள பிறப்பு இறப்பு அறிக்கைகளை பைண்டிங் செய்வதற்கு உத்தேச ரூபாய் 1700/–க்கும், விலைப்புள்ளிகள் வாங்கவும் தீர்மானம் எண்.394 நாள் 17.11.2007–ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்பேரில் மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் விபரம் கீழ்க்கண்டவாறு உள்ளது.

| வ.எண். | விலைப்புள்ளி வழங்கியவர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | தாசன் அச்சகம், குளச்சல் | பைண்டிங் செய்ய புத்தகம் 1–க்கு ரூ. 55/– |
| 2 | தங்கம் ஜெராக்ஸ் & பைண்டிங், குளச்சல் | பைண்டிங் செய்ய புத்தகம் 1–க்கு ரூ. 59/– |
| 3 | கிரேஸ் பைண்டிங், நாகர்கோவில் | பைண்டிங் செய்ய புத்தகம் 1–க்கு ரூ. 64/– |

குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள தாசன் அச்சகம், குளச்சல் அவர்களுக்கு பைண்டிங் செய்ய பணி உத்தரவு வழங்க மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள தாசன் அச்சகம், குளச்சல் அவர்களுக்கு பைண்டிங் செய்ய பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்எண்.404.** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

**பொருள் எண் : 12**

குளச்சல் நகராட்சி மினி லாறி TN-74-5507 -க்கு 6– டயர் ரீபட்டன் செய்வதற்கு உத்தேச செலவு ரூ. 10,000/–க்கு 02.11.2007–ல் நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெறப்பட்டு அதன்பேரில் 19.11.2007–ல் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

| | | | |
|---|---|---|---|
| 1 | மணி மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் | டயர் 1–க்கு ரூ.1600/– வீதம் 6 டயர் | ரூ. 9,600 |
| 2 | கே.எஸ்.எஸ்.எஸ்.ஆட்டோ மொபைல்ஸ், நாகர்கோவில் | டயர் 1–க்கு ரூ.1650/– வீதம் 6 டயர் | ரூ.9,900 |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மணி மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி குறைவானதை எற்கவும், பொது நிதியிலிருந்து செலவு செய்திடவும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : அவசரம் அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும், குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மணி மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம்எண்.405.** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

**பொருள் எண் : 13**

இந்நகராட்சியில் 2004–2005 ஆம் ஆண்டு முதல் கணக்குகள் முடிக்கப்படாத நிலையில் இருந்ததால் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் வேறு பணியாளர்களை மாத ஊதியத்தில் அமர்த்தி கணக்குகளை முடித்து அனுப்பலாம் என்று தெரிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் ஓய்வுபெற்ற கணக்கர் திரு.சி.வெற்றிவேல் அவர்களை 2007 ஜுன் மாதம் முதல் கணக்கு பணிகளை பார்க்குமாறு தெரிவிக்கப்பட்டு, 2004–05–ம் ஆண்டு கணக்கு முடிக்கப்பட்டு தணிக்கை நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளது. மேலும் 2005–06–ம் ஆண்டு கணக்குகள் முடிக்கப்பட்டு உள்ளாட்சி நிதி தணிக்கை அலுவலகத்திற்கு 17.11.2007 அன்று அனுப்பி ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. மேலும் 2007–08–ம் ஆண்டு வரவு, செலவு திட்ட மதிப்பீடும் தயார் செய்து மன்ற அனுமதிக்காக அடுத்த கூட்டத்தில் வைக்கப்பட உள்ளது. எனவே ஓய்வுபெற்ற கணக்கர் திரு.சி. வெற்றிவேல் என்பவருக்கு மாதம் ரூ.2500/– வீதம் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம்எண்.406.** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

**<u>பொருள் எண் : 14</u>**

நகர்மன்ற தீர்மானம் எண். 336 நாள் 20.03.2007–ல் 12–வது நிதிக்குழு பரிந்துரை திட்டத்தின்கீழ் (2007–2008) இந்நகராட்சிக்குட்பட்ட பெரிய பள்ளி எதிர்புறம் வடிகால் ஓடை சீரமைக்கவும், சிறுபாலம் சீரமைக்கவும் ரூ. 1,20,000/–க்கான மதிப்பீட்டினை அங்கீகரித்ததன் அடிப்படையில் 16.11.2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு. பி. ஜெயராஜ் | 0.07% மதிப்பீட்டை விட குறைவு ( ரூ.1,17,648.50 ) |
| 2. | திரு.பி. தங்கமணி | 4.49% மதிப்பீட்டை விட அதிகம் (ரூ. 1,23,032. 00 ) |

இதில் திரு.பி.ஜெயராஜ் என்பவர் 0.07% மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.பி.ஜெயராஜ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம்எண்.407.** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

**<u>பொருள் எண் : 15</u>**

நகர்மன்றத் தீர்மானம் எண். 327 நாள் 20.09.2007–ல் 12–வது நிதிக்குப திட்டத்தின்கீழ் (2007–2008) இந்நகராட்சிக்குட்பட்ட இந்திரா காலனியில் தற்போது குப்பைகள் கொட்டப்பட்டு வரும் குப்பைகளை மண்புழு உரம் தயாரிக்கும் கட்டமைப்பு ஏற்படுத்துவதற்காக தோண்டி அப்புறப்படுத்தும் பணி தொடர்பான மதிப்பீடு ரூ. 1,25,000/–க்கு அங்கீகரிக்கப்பட்டதன் பேரில் 06.11.2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு. வி.டேவிட் ராஜன் | மதிப்பீட்டு விகிதம் ரூ. 1,21,120/– |
| 2. | திரு.பி. தங்கமணி | 2.85% மதிப்பீட்டை விட அதிகம் (ரூ. 1,23,650/–) |

இதில் திரு.வி. டேவிட் ராஜன் என்பவர் மதிப்பீட்டு விகிதத்தில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.வி.டேவிட்ராஜன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம்எண்.408.** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

**<u>பொருள் எண் : 16</u>**

நகர்மன்றத் தீர்மானம் எண். 380 நாள் 20.09.2007–ல் இந்நகராட்சி குடிநீர் பிரிவில் குடிநீர் நீரேற்றும் குழாய்கள், குடிநீர் விநியோகம் செய்யும் குழாய்கள் ஆகியவற்றில் அடிக்கடி ஏற்படும் பழுதுகளை போர்க்கால அடிப்படையில் உடனுக்குடன் சரி செய்து குடிநீர் வினியோகம் செய்ய ஏதுவாக சமர்ப்பிக்கப்பட்ட ரூ. 66,000/–க்கான மதிப்பீட்டினை அங்கீகரித்ததன் அடிப்படையில் 16.11.2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு. சி. சந்திரசேகர் | 0.05 % மதிப்பீட்டை விட குறைவு (ரூ. 65,644.36 ) |
| 2. | திரு.பி. தங்கமணி | 7.21 % மதிப்பீட்டை விட அதிகம் (ரூ. 70,410 .00 ) |

இதில் திரு. சி. சந்திரசேகர் என்பவர் 0.05% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. சி. சந்திரசேகர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம்எண்.409.** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

**பொருள் எண் : 17**

12–வது நிதிக்குழு (2007–2008)–ன்படி இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 327 நாள் 20.09.2007–ல் இந்திரா காலனி பகுதியில் குப்பைகள் கொட்டப்படும் இடத்தில் மண்புழு உரம் தயாரிக்கும் திட்டத்தில் வாட்ச்மென் ஷெட், ஸ்டோர் ரூம் மற்றும் குடிநீர், மின்சார வசதிகள் மேற்கொள்ள ரூ, 1,10,000/– க்கான மதிப்பீட்டை அங்கீகரித்துள்ளது. எனவே இது தொடர்பாக 06.11.2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு. வி.டேவிட் ராஜ் | 0.81 % மதிப்பீட்டை விட அதிகம் (ரூ. 1,00,854.00) |
| 2. | திரு. அம்புரோஸ் | 0.04 % மதிப்பீட்டை விட குறைவு ( ரூ. 1,00,005.10 ) |

இதில் திரு.அம்புரோஸ் என்பவர் 0.04% மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.அம்புரோஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம்எண்.410.** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

**பொருள் எண் : 18**

கடந்த 2004–ல் ஏற்பட்ட சுனாமி பேரழிவில் இந்நகராட்சிக்குட்பட்ட கடலோரப் பகுதிகளில் சுமார் 1300–க்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்து தரைமட்டமாயின. இதன் காரணமாக சம்மந்தப்பட்ட கட்டிடங்களின் சொத்து வரியினை தள்ளுபடி செய்வது தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித எண். ஓ.மு.எண். 4150/2007/ஆர்1 நாள் 02.11.2007–ல் வரிவசூல் செய்ய இயலாத இனங்களில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 118–ன்படி நடவடிக்கை மேற்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம்எண்.411.** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

**பொருள் எண். 19**

அரசு ஆணை எண். 282 சுற்றுலா மற்றும் செய்தித்துறை நாள் 30.10.2006–ல் குளச்சல் நகராட்சிக்கு ரூ.50.00 இலட்சம் சுற்றுலா அபிவிருத்தி திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், இது தொடர்பாக அரசு செயலர், சுற்றுலாத்துறை அவர்களின் D.O.Lr.120/ செயலர்/ சுற்றுலா மற்றும் கலாசாரம்/07 நாள் 16.11.2007–ல் சுற்றுலா இயக்குநருக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது. எனவும் குறிப்பிட்டுள்ளார். எனவே இது தொடர்பாக நகராட்சி மன்றத் தலைவர் மற்றும் ஆணையர் அவர்களுடன் ஆலோசனை செய்யப்பட்டு தற்போது சுனாமி திட்டத்தில் பீச் ஜங்சன் முதல் காந்தி ஜங்சன் வரை அமைக்கப்பட்ட நடை பாதையில் தரை ஓடு மற்றும் துருப்பிடிக்காத கம்பியில் கைப்பிடி அமைத்தும், மேலும் காந்தி ஜங்சனிலிருந்து நகராட்சி அலுவலகம் வரை சாலையின் இருபுறமும் வடிகால் கட்டி, நடை பாதை அமைத்து தரை ஓடு, துருப்பிடிக்காத கைப்பிடி மற்றும் அலங்கார விளக்குகள் அமைத்திடவும் அறிவுறுத்தப்பட்டது. எனவே மேற்படி ரூ. 50.00 லட்சம் மதிப்பீடு கொண்ட பணிக்கான பிரேரணையினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம்எண்.412.** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

**பொருள் எண் : 20**

குளச்சல் நகராட்சி மன்றத்தின் 17–வது வார்டு உறுப்பினர் கொண்டுவரும் தீர்மானம்

குளச்சலிலிருந்து நாகர்கோவில், சாமிதோப்பு வழியாக கன்னியாகுமரிக்கு ஒரு பேருந்து இயக்க TNSTC நிர்வாகத்தை கேட்டு மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம்எண்.413.** ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

**பொருள் எண் : 21**

குளச்சல் நகராட்சி மன்றத்தின் 18–வது வார்டு உறுப்பினர் கொண்டுவரும் தீர்மானம்

நகராட்சிகளின் கடன் சுமையை குறைக்க நடவடிக்கை மேற்கொண்டு நகராட்சிகள் அரசுக்கு செலுத்த வேண்டிய கடன் மற்றும் வட்டித் தொகையை தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பித்த மாண்புமிகு தமிழக உள்ளாட்சித்துறை அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து இந்த மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம்எண்.414.** ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

**பொருள் எண் : 22**

குளச்சல் நகராட்சி மன்றத்தின் 21–வது வார்டு உறுப்பினர் கொண்டுவரும் தீர்மானம்

நகராட்சி பகுதியில் உள்ள மக்களிடம், சொத்துவரி, குடிநீர் கட்டணம் இன்னும் பிற வரிகள் பெறும் போது கதவு எண் மட்டும் நகராட்சியால் கொடுக்கும் ரெசீதில் உள்ளது. ஆனால் அரசிடமிருந்து பெறும் எந்த உதவிக்கும் அல்லது விண்ணபத்திற்கு நகராட்சி மக்களுக்கு விலாசம், தெரு எண், பெயர் அடங்கிய சொத்துவரி, குடிநீர் கட்டண ரெசீதுகளை மக்களுக்கு வழங்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**அ.குறிப்பு :** இதனை சரி செய்ய வருங்காலங்களில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**தீர்மானம்எண்.415.** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

**பொருள் எண் : 23**

குளச்சல் நகராட்சி மன்றத்தின் 18, 21, 22–வது வார்டு உறுப்பினர்கள் கொண்டுவரும் தீர்மானம்

தமிழகத்தின் பிற்படுத்தப்பட்ட, இஸ்லாமிய மற்றும் கிறிஸ்தவ வகுப்பினருக்கு 3.5 சதவீதம் வேலை வாய்ப்புகளில் இட ஒதுக்கீடு செய்து அவசர சட்டம் பிறப்பித்து அதனை நடப்பு சட்டமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றிய மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழ் மூதறிஞர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களுக்கு குளச்சல் நகர்மன்றம் சார்பில் பாராட்டும், நன்றியும் தெரிவித்து இந்த மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம்எண்.416.** ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

தலைவர்

குளச்சல் நகராட்சி மன்றம்